26 & 27 ஜூன் 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH பொதுக்காலம் ஆண்டின் 21 ஆம் ஞாயிறு

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

**ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)**

உரோமைக்கு அனுப்பப்பட்ட மலேசிய - சிங்கப்பூர் மற்றும் புருனை ஆயர்களின் மாநாட்டின் மூலம் நடைபெற்ற ஆயர் மாமன்ற அறிக்கைக் கண்டுபிடிப்புகளின் சுருக்கம் தொடர்கிறது.

மாதாந்திர கருப்பொருள்:
**புதுப்பித்தலை நோக்கிப் பயணித்தல்**

மாதாந்திர நிகழ்வு:
**அஜிர்னமெந்தோ (மறுமலர்ச்சி 1976)**



## மலேசிய மறைமாவட்டங்களின் முடிவுரை:

பல, இன மற்றும் கலாச்சார நிலப்பரப்பின் மத்தியில் நல்லிணக்கம், ஒருங்கிணைப்பு, மரியாதை மற்றும் சமய சகிப்புத்தன்மையை பேணுவதற்கான முயற்சிகள், துடிப்பான, அக்கறையுள்ள மற்றும் முற்போக்கு நிறைந்த தலத்திருஅவையின் ஆயர்மாமன்ற பயணத்தை இது விளக்குகிறது. இதன்வழியாக பணிசெய்ய பலரும் முன்னோக்கி வருவதற்கு இது வழிவகுக்கும்.

## சிங்கப்பூர் மறைமாவட்டத்தின் ஆயர்மான்ற அறிக்கையின் தொகுப்பு:



### சுருக்கம்:

அ. 2021-2022 வரை - கடந்த 6 மாதங்களில் 16,898 கத்தோலிக்கர்கள் ஆயர்மாமன்ற பேரவைக்கு பதில் அளித்துள்ளனர்.

ஆ. 7 கருப்பொருள்கள் அடையாளம் காணப்பட்டு தேர்ந்து தெளிவாக அறியப்பட்டன. கீழ்க்கண்டவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டன.

1. சீடத்துவம் மற்றும் கிறிஸ்தவ வாழ்க்கை
2. உருவாக்கப்பயிற்சி & கல்வி
3. திருவழிபாடு, இறைவேண்டல் & ஆன்மீகம்
4. உறவு
5. அரசாங்கம் & கட்டமைப்பு
6. பங்கு வாழ்வு
7. மறைத்தூது

இ. கருத்து இணைப்பு:

- சிறந்த கத்தோலிக்கர்களாக இருக்கவேண்டும் என்று ஆழ்ந்த ஆர்வம், கடவுளோடும் அவரின் மக்களோடு கொண்டுள்ள வலுவான நம்பிக்கை நிறைந்த வாழ்க்கை.
- நம்பிக்கை உருவாக்கப்பயிற்சிகள் இன்னும் சிறப்பாகப் பலப்படுத்தப்படும்
- இன்னும் வரவேற்கத்தக்க, வெளிப்படையான மற்றும் தீர்ப்பிடாத திருஅவை
- இரு துருவங்களாக உள்ளன: (1) திருஅவை மிகவும் பாரம்பரியம்மிக்க அதிகாரத்தைக் கொண்டுள்ளது மற்றும் சிறிது வளைந்துகொடுக்கும் குணம் தேவை. (2) நவீனத்தன்மையைவிட அதிக மரியாதை மற்றும் பாரம்பரியம் தேவை.
- சமூகங்கள் சிறந்த கட்டமைப்புகளைக் கொண்டுள்ளன. மேலும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டால் நம்முடைய நம்பிக்கைப் பயணத்தை வலுப்படுத்த அனைவருக்கும் இடையே அர்த்தமுள்ள உறவுகளை உருவாக்கலாம்.

நிறைவு:

2022 டிசம்பர் மாதத்துக்குள் பரிந்துரைகளை ஆழமாக ஆய்ந்துப் பார்க்க ஒரு மாமறை மாவட்ட மேய்ப்புக்குழு உருவாக்கப்படும்.

## புருணையின் அப்போஸ்தலிக்க குழுவிலிருந்து - ஆயர் மாமன்ற அறிக்கையின் தொகுப்பு:



### அ. பொதுவான அறிக்கை

அ. 2021-2022 வரை - கடந்த 6 மாதங்களில் 16,898 கத்தோலிக்கர்கள் ஆயர்மாமன்ற பேரவைக்கு 275 கத்தோலிக்கர்ககள் மற்றும் கத்தோலிக்க திருஅவையை விட்டுட் பிரிந்த ஞாயிறு மறைக்கல்வி மாணவர்களிடமிருந்து திரப்பட் பதில்கள்:

### ஆ. கருத்துகள்:

- முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருக்கும் இடத்தில கத்தோலிக்கர்கள் 'றிய குழுவாக இருந்தாலும் மக்களின் நம்பிக்கை செழித்தோங்குவது
- திருப்பலிக்குச் செல்லவும், நம்பிக்கையை சுதந்திரமாகப் பின்பற்றுவதும் பாராட்டுதலுக்குரியது.
- திருப்பலிக்கு பெருமளவில் வந்தாலும், சமூகமாக இணைந்திருப்பது குறைவு. சில குழுக்கள் தேசியமொழி மற்றும் சீனமொழி பேசுவோர் விடுபட்டிருப்பதைப் போன்ற உணர்வு
- மூன்று பங்குகள் மற்றும் குழந்தைகளின் தேவையைக் கண்காணிக்கும் அருள்பணியாளர்களின் பணி பாராட்டுக்குரியது. மக்களின் குரலுக்கு, எண்ணங்கள் மற்றும் ஆலோசனைகளுக்கு செவிகொடுப்பது. அருள்பணியாளர்கள் மற்றும் பொதுநிலையினரிடையே இனைந்து செயல்படுவது மிகவும் அவசியம்.
- கர்தினால் கொர்னேலியஸ் சிம் அவர்களின் மறைவு ஆழ்ந்த துயரத்தைத் தந்தது.
- புலம்பெயர்ந்தோரின் சமூகத்தினரை வரவேற்றது அவர்களின் மத்தியில் மிகவும் வரவேற்கப்பட்டது.
- பொதுநிலையினருக்கு (அவரவர்களின் சொந்த மொழிகளில்) ஆன்மீக உருவாக்கப்பயிற்சி அதிகம் தேவை.
- முதியோருக்கு நம்பிக்கை உருவாக்கப்பயிற்சிகள் மற்றும் விவிலியப் போதனை தேவை
- கத்தோலிக்கத் திருஅவையை விட்டுப் பிரிந்தவர்களை ஆய்வு செய்து மீண்டும் அவர்களை திருஅவைக்குக் கொண்டுவருவது.
- தலைவர்கள் மற்றும் பெற்றோர்கள் முன்மாதிரியாகத் திகழ புதுப்பித்தல் அவசியம்.
- சமூகத்திற்கு ஆதரவாக இருக்க, சேவை செய்யவும், தூதுரைக்கவும், திறன்களை அறிந்துகொள்ளவும், இன்னும் அதிகமாக வளர்த்துக்கொள்ளவும், செவிமடுத்தல் மற்றும் பயிற்சிகள் தேவை. தூதுரைக்கவும், அனைவரையும் ஆதரிக்கவும் வேண்டும்.
- இறை அழைத்தல் மற்றும் தேர்ந்து தெளிந்து முடிவெடுக்க இன்னும் ஊக்குவிப்பு தேவை.
- இளைஞர்கள் தங்களை திருஅவை அவர்களை அதிகமாக தொடர்புகொள்வதில்லை என்ற உணர்வு. அவர்கள் தான் எதிர்கால திருஅவையின் தூண்கள் என்பதையும், நம்பிக்கையிலும் திருஅவையிலும் வேரூன்றி இருக்கவேண்டும் என்பதை அவர்கள் உணரவும் அவர்களை உருவாக்க வேண்டும். கூடுதல் நேரத்தை அவர்களுக்குத் தரவேண்டும். பதின்ம வயதினர், வேலை செய்யும் இளைஞர்கள், முதியோர் இவர்கள் அனைவரையும் இதில் ஒன்றிணைக்க வேண்டும்.

### நிறைவு:

தூய ஆவியாரின் கனிகளின் வழியாக கண்டறியப்பட்ட இந்த ஆலோசனைகள், செயல்முறைத் திட்டங்கள், ஆயர்மாமன்றத்தின் நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற திருஅவை அடித்தளம் அமைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.



ஆதாரம்:
www.cbcmsb.org

திருத்தம்:
அருள்பணி யூஜின்
இயக்குனர் மாமறைமாவட்ட
மேய்ப்புப்பணி மையம் (API)

மின்னஞ்சல்:
apidirectorkl@gmail.com

INTERNAL CIRCULATION ONLY

BUL 35/2023